2

# சின்ன மகள்

அம்மா
நினைவிருக்கிறதா
நான் வீட்டில் வாழ்ந்த காலத்தில்
என்னை
"சின்ன மகள்" என்று அழைப்பாய்!
அது
(குடும்பச் சுமையைக் குறைப்பதற்காக)
நான் புறப்படுமுன்

கண்காணாத் தொலைவில்
அந்நியர்களிடை
என்னை
"லிஸி" என்று அழைக்கிறார்கள்.

தெருவில்
இருகைகளிலும் தலையிலும்
சுமைகளைத் தூக்கிச்செல்கையில்
என்னை
"பணிப்பெண்" என்கிறார்கள்.

சின்னப்பிள்ளையின் கையைப் பிடித்து
அதை
பள்ளிக்குக் கூட்டிச் செல்கையில்
"அதோ போகிறாள் பிள்ளையின் செவிலி"
என்கிறார்கள்.

உணவு சமைக்கையில்
பரிமாறுகையில்
தண்ணீர் அள்ளுகையில்
விறகு கொத்துகையில்
என்னை
"சமையற்காரி" என்கிறார்கள்.

ஆனால்
அம்மா
அன்றாட வேலை முடித்து
என்பாயில்
உடலை நீட்டுகையில்
என் கனவுகளில்
நீ வந்து
காதோடு அழைக்கிறாய்,
"சின்ன மகளே" என்று.

*சிங்கள மூலம் : மொனிக்கா றுவன்பத்திரன*
*ஆங்கில வடிவம் : ரஞ்ஜினி ஒபயசேகர*
*தமிழில் : சோ. பத்மநாதன்*



இலவச விநியோகத்திற்காக